மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.T.கோகுலகிருஷ்ணன் B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஜுலை** மாதம் **11**ம் நாள்
**சுபகிருது** ஆண்டு **ஆனி** மாதம் **27**ம் நாள் **திங்கட்** கிழமை
CNR.No. TNMD-19-000235-2013
**I.A . No. 453/2021**
**in**
**O.S. No. 157/2013**

A. தனிக்கொடி

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. O. ராஜா
2. M. சித்ரா
3. K. மகாராஜன்
4. வேழவேந்தன்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு **29.03.2021**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**R.கணேசன்** அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**G.பாலசுப்ரமணியன்** அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜரின்மை காரணமாக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், கடந்த **05.07.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில், மனுவில் கண்டுள்ளவாறு அசல் வழக்கு பிராதினை திருத்தம் செய்ய அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் சட்டப்பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:

மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார் என்றும், அசல் வழக்கானது, தாவா சொத்தினை

பொறுத்து விளம்புகை மற்றும் தாவா சொத்தில் உள்ள மனுதாரர்/வாதியின் அனுபவத்தினை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வருகின்மை காரணமாக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, கடந்த 04.03.2014ம் தேதியில் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், கடந்த 10.09.2019ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையுடன் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையினை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 01.02.2021 தேதியில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை பாரா -7ல், கடந்த 17.01.2013ம் தேதியிட்ட மோசடியான கிரையபத்திரத்தினை பொறுத்து அசல் வழக்கில் பரிகாரம் கோரப்படவில்லை என்று கடந்த 10.09.2019ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையினை பார்வையிடப்பட்டதற்கு பின்னர் தான் மேற்படி முக்கியமான விபரம் மனுதாரர்/வாதியின் கவனத்திற்கு தெரியவந்தது என்றும், எனவே தாவா பிராது பரிகார பகுதியில் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு அளவிட முடியாத இழப்பு ஏற்படும் என்றும், இம்மனு அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்க வாய்ப்பில்லை என்றும், எனவே தாவா பிராதினை திருத்தம் செய்யும் பொருட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பு எதிர் உரையின் சுருக்கம்</u>**

1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார் என்றும், மனுவில் சொல்லப்பட்டுள்ள விசயங்கள் பொய்யானது என்றும், வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.01.2013ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் வழங்கிடும் முன்பே மனுதாரர்/வாதிக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி வழக்கு தாக்கல் செய்த 2014 முதல் மே 2019 வரை மனுதாரர்/வாதி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை எவ்வித தொந்தரவும் செய்யாமல் தாவா வழக்கினை வாபஸ் பெறுவதாக தெரிவித்து விட்டு, 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் ஒரு தலைபட்ச உத்திரவினை பெற்றது மட்டுமில்லாமல் தாவா சொத்திற்கு மனுதாரர்/வாதி பெயரில் பட்டா கேட்டு வருவாய்துறையில் முறையிட்ட விபரம் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு தெரிந்து கேட்டபோது, உனக்கு தெரிந்ததை பார்த்து கொள் என்று கூறிவிட்டார் என்றும், மனுதாரர்/வாதி தாவா இடத்தினை உண்மையான உரிமையாளரிடம் இருந்து பெறவில்லை என்றும், மனுதாரர்/வாதி குறிப்பிடும் நபர்களான கிருஷ்ணன் மற்றும் அவரது மகளுக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், தவறான நபர்களிடம் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லாது என்ற அடிப்படையிலும், அதன்பேரில் மனுதாரர்/வாதி பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படுத்தியிருந்தால் அதுவும் செல்லாது என்றும், மனுதாரர்/வாதி வழக்கு பிராதில்

குறிப்பிட்டுள்ள அனைத்து விபரங்களும் பொய்யானது என்றும், மனுதாரர்/வாதி கிரையம் பெற்ற நபர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றும், மனுதாரர்/வாதி கோரி பரிகாரமான விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மேற்படி நபர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டும் என்றும், அவ்வாறு செய்தால் பொய்யான பத்திரம் பதிவு செய்த விபரம் தெரிந்து விடும் என்பதால் அவர்களை தரப்பினர்களாக வழக்கில் சேர்க்கவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவா சொத்தினை கிரையம் பெற்ற விபரமும், வருவாய்துறை ஆவணங்களில் 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்ட விபரமும் நன்கு தெரிந்தும், அதனை மறைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவினை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு:-</u>

4) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

5) இம்மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி விசாரணை தொடங்குவதற்கு நிலுவையில் இருந்து வருகிறது.

6) இம்மனுவின் அசல் வழக்கில் 1ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில், கடந்த 17.01.2013ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக ஏற்பட்டுள்ள கிரைய பத்திரத்தை பொறுத்து இல்லா நிலையது செல்லதக்கதல்ல (Null and void) என விளம்புகை பரிகாரம் கோரியும் மேற்படி விளம்புகை பரிகாரத்திற்குண்டான நீதிமன்ற கட்டண மதிப்பு மற்றும் நீதிமன்ற கட்டணம் திருத்தம் செய்யப்பட வேண்டியும், பரிகார காலத்தில் கடந்த 17.01.2013ம் தேதியில் 2ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதி வைக்கப்பட்ட கிரைய ஆவணத்தை பொறுத்து இல்லா நிலையது செல்லதக்கதல்ல (Null and void) என விளம்புகை பரிகாரத்திற்காகவும், நீதிமன்ற கட்டணம் செலுத்தக்கூடிய நிலையில், உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி திருத்தம் செய்ய வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக மனு அபிடவிட்டை பார்வையிட்ட வகையில் சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

7) தாவா சொத்தானது, மனுதாரர்/வாதியால் உண்மையான உரிமையாளரிடமிருந்து பெறவில்லை என்றும், மனுதாரர்/வாதியால் குறிப்பிடக்கூடிய கிருஷ்ணன் மற்றும் அவரது மகள் ஆகியோர்களுக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், தவறான நபர்களிடமிருந்து பெறப்பட்ட கிரையம் சட்டப்படி செல்லாது என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் ஏற்பட்டு சொத்தின் சுவாதீனம், பட்டா, சிட்டா அடங்கல் ஆகியவை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள விபரம் மனுதாரர்/வாதிக்கு நன்றாக தெரியும் என்றும், ஆகையினால் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) இம்மனுவின் அசல் வழக்கானது, தாவா சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் தொடர் பரிகாரமாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தை 3ம் தரப்பினருக்கு எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்திடாமல் இருந்திட நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு, கடந்த 22.02.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு இந்திய காலவரையறைச் சட்டத்திற்குட்பட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ளப்படுகிறது.

10) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் கண்ட பரிகாரத்தை பொறுத்தவரை அசல் வழக்கில் நிரூபணம் செய்திட மனுதாரர்/வாதியே கடமைப்பட்டவர் ஆவார்.

11) உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 என்பது,

> கட்டளை 6 விதி 17. வாதுரைகளை திருத்துதல்
> 17. வழக்குரைகளை திருத்துதல் - நீதிமன்றம் நடவடிக்கைகளின் எந்தக்கட்டத்திலும் நியாயமாக இருக்கலாகும் முறையிலும் நிபந்தனைகளின் பேரிலும் இருதரப்பினரின் எவர் ஒருவரையும் அவருடைய வழக்குரைகளை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு அனுமதிக்கலாம். மேலும் தரப்பினர்களிடையே விவாதத்திலுள்ள உண்மையான பிரச்சினைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு எத்தகைய திருத்தங்கள் அவசியமாக இருக்காலகுமோ அத்தகைய திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுதல் வேண்டும்.
>
> வரம்புரையாக: மிகவும் கவனமாக இருந்தும், வழக்கு தரப்பினர் அந்த விடயத்தை விசாரணைக்கு முன் எழுப்ப முடியவில்லை என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்தாலன்றி, வழக்குரையில் திருத்தஞ் செய்வதற்கான விண்ணப்பத்தை விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளதில், சமூகம் நீதிமன்றத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

12) மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்புரையில்,

*In Mahila Ramkali Devi & Ors Vs. Nandram (Dead) through Legal Representatives & Ors.(2015)13 SCC 132*

*"20. It is well settled that rules of procedure are intended to be a handmaid to the administration of justice, A party cannot be refused just relief merely because of some mistake, negligence, inadvertence or even infraction of rules of procedure. The court always gives relief to amend the pleading of the party, unless it is satisfied that the party applying was acting malafide or that by his blunder he had caused injury to his opponent which cannot be compensated for by an order of cost.*

*21. In our view, since the appellant sought amendment in Para 3 of the original plaint, the High Court ought not to have rejected the applications*

*22. In Jai Jai Ram Manohar Lal V. National Building material Supply (1969 AIR 1267), this Court held that the power to grant amendment to pleadings is intended to serve the needs of justice and is not governed by any such narrow or technical limitations.*

இவ்வாறு மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள கருத்துரைகளை சமூகம் நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

13) எனவே, இம்மனுவின் அசல் வழக்கானது, சாட்சி விசாரணை தொடங்கப்படுவதற்கு முன்பு மனுதாரர்/வாதியால் அசல் வழக்குரையை திருத்தம் செய்திட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், திருத்தம் செய்ய வேண்டிய சங்கதிகளை பொறுத்து சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டதில், 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்கு எவ்வகையிலும் பாதகமாக இல்லை என இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், இந்த மனு அனுமதிக்கப்படுவதினால் 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு அசல் வழக்கில் எதிர்வாதம் செய்யப்படுவதில், எந்த வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

14) எனவே, மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி அசல் வழக்கு விசாரணையில் மேலும் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அசல் வழக்கின் தன்மை கருதியும், இம்மனுவின் தன்மை கருதியும் நீதியின் நலன் கருதியும், இம்மனுவிற்கான செலவுதொகையாக 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு ரூ.300/- எதிர்வரும் 15.07.2022ம் தேதிக்குள் மனுதாரர்/வாதி

தரப்பில் செலுத்தி வைக்க வேண்டி உத்திரவு பகரப்படுகிறது. அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் சட்டத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும்.

இறுதியாக,

இம்மனுவிற்கான செலவுதொகையாக 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு ரூ.300/- எதிர்வரும் 15.07.2022ம் தேதிக்குள் மனுதாரர்/வாதி தரப்பில் செலுத்தி வைக்க வேண்டி உத்திரவு பகரப்படுகிறது. அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் சட்டத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும் என உத்தரவு பகரப்படுகிறது. வழக்கு விசாரணை : 18.07.2022.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.